(6 pages) Reg. No. : ..............................

**Code No. : 30552** **Sub. Code : CMTA 62**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2024.

Sixth Semester

Tamil – Core

காப்பிய இலக்கியம்

(For those who joined in July 2021-2022 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எதுக.

1. 'கணவனை இழந்தாள் கடை அகத்தாளே' - என்னும் அடி இடம்பெறும் காப்பியத்தினைச் சுட்டுக.

(அ) சிலப்பதிகாரம்

(ஆ) மணிமேகலை

(இ) சீவக சிந்தாமணி

(ஈ) குண்டலகேசி

2. கரிகால் வளவனின் மகள் பெயரினைக் கூறுக.

(அ) ஆட்டனத்தி (ஆ) ஆதிமந்தி

(இ) விசையை (ஈ) கண்ணகி

3. நாக இலச்சினையை உடையவர் யார்?

(அ) சாதுவன் (ஆ) அச்சணந்தி

(இ) நாகர் (ஈ) மணிமேகலை

4. குண்டலகேசியின் இயற்பெயர் யாது?

(அ) கவுந்தி (ஆ) நீலகேசி

(இ) பத்தரை (ஈ) ஐயை

5. குண்டலகேசியின் வரலாற்றைக் கூறும் நூல் எது?

(அ) நீலகேசி (ஆ) சூளாமணி

(இ) வளையாபதி (ஈ) சீவக சிந்தாமணி

6. சிந்தாமணி என்பதன் பொருள் யாது?

(அ) பவளம் (ஆ) வைரம்

(இ) முத்து (ஈ) ரத்தினம்



7. கம்பரை ஆதரித்தவர் யார்?

(அ) சீதக்காதி வள்ளல்

(ஆ) சடையப்ப வள்ளல்

(இ) கடையேழு வள்ளல்கள்

(ஈ) கர்ணன்

8. இராமனுக்காக சீதையிடம் தூது சென்றவர் யார்?

(அ) இலக்குவன் (ஆ) பரதன்

(இ) அனுமன் (ஈ) வீடணன்

9. சர்ப்பம் யாரைத் தீண்டியது?

(அ) அபூபக்கர் சித்திகு (ஆ) முகம்மது நபி

(இ) ரகுமான் (ஈ) முஸ்தபா ரசூல்

10. வேற்படை வீரரை அழித்த வீரர் யார்?

(அ) சேதையோன் (ஆ) கபிரியேல்

(இ) இயேசு (ஈ) யூதாஸ்



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடையளிக்க.

11. (அ) கண்ணகி காற்சிலம்பை உடைத்த நிகழ்வை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கண்ணகி தீக்கடவுளை வேண்டிய முறையை நிரல்படுத்துக.

12. (அ) காயசண்டிகை புகார் நகர மக்களிடம் கூறியவற்றை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) காய சண்டிகையின் கற்புத் திறத்தை எடுத்துரைக்க.

13. (அ) வளையாபதி காப்பியத்தின் பண்புகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) சீவகசிந்தாமணி காப்பியம் உணர்த்தும் நாட்டுவளம் பற்றி எழுதுக.

14. (அ) அனுமன் இராமனுக்கு உதவியதை விளக்குக.

(அல்லது)

(ஆ) திருநீலநக்க நாயனார் - குறிப்பு வரைக.



[P.T.O.]

15. (அ) அபூபக்கர் சித்திகுவின் குணநலன்கள் யாவை?

(அல்லது)

(ஆ) சேதையோனின் தோற்றம் பற்றி எழுதுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களில் விடையளிக்க.

16. (அ) கண்ணகி தன்னை மன்னனிடம் அறிமுகப்படுத்திய விதத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கண்ணகி வஞ்சினம் கூறியதை வஞ்சின மாலை காதைவழி விளக்குக.

17. (அ) ஆதிரையின் வரலாற்றை மணிமேகலை வழி எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) குண்டலகேசி காப்பியச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

18. (அ) சீவகன் கல்வி கற்ற சூழலை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) நாமகள் இலம்பகத்தின் மூலம் நீவிர் அறியும் கருத்துக்களை எழுதுக.



19. (அ) அனுமனின் செயற்கரிய செயல்களாக கம்பராமாயணம் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திருநீலநக்க நாயனார்க்கு இறைவன் காட்சியளித்ததை விவரி.

20. (அ) இறைதூதனின் சிறப்புக்களை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) சூசை கூறிய அறிவுரைகளைப் பட்டியலிடுக.

---